D. SRINIVASAN.. M.com., M.Ed.,

**8801** 12th அரையாண்டுத் தேர்வு - 2018 Reg. No. | | | | | | | |

நேரம் : 2.30 மணி

# பொதுத்தமிழ்

மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாக உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.**

**2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.**

**குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**


**I. பலவுள் தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக)** **6 x 1 = 6**

1. பொருத்துக

| புலவர்கள் | | நூல்கள் |
|---|---|---|
| a) இளங்கோவடிகள் | i) | மணிமேகலை |
| b) திருத்தக்க தேவர் | ii) | சிலப்பதிகாரம் |
| c) நாதகுத்தனார் | iii) | சீவகசிந்தாமணி |
| d) சீத்தலைச் சாத்தனார் | iv) | குண்டலகேசி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| அ) | (iii) | (i) | (iv) | (ii) |
| ஆ) | (ii) | (iii) | (iv) | (i) |
| இ) | (ii) | (i) | (iv) | (iii) |
| ஈ) | (ii) | (iii) | (i) | (iv) |

2. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.



அ) காலத்ததின்றற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்திண் மாணப் பெது.

ஆ) மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

இ) எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ஈ) திணைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரிவார்.

3. 'காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்' – யாருடைய கூற்று.
அ) மாதரி ஆ) மாதவி இ) கண்ணகி ஈ) கவுந்தியடிகள்

4. 'கால்வாய் இல்லாத இடத்தில் பெய்த ஒளி மழையே கவிதை' :
அ) கீட்ஸ் ஆ) பவணந்தி அடிகள் இ) கோலரிட்ஜ் ஈ) கம்பர்

5. 'ஆவுந் தமிழரும்' என்ற தலைப்பிலான உரைநடையை படைத்தவர் யார்?
அ) இளவழகனார் ஆ) மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் இ) டாக்டர் அ. சிதம்பரநாதன் ஈ) டாக்டர் மு. வரதராசனார்

6. கோயில்களின் அதிட்டானத்தில் காணப்படும் சிறு சிற்பங்கள் :
அ) பல்லவர் காலம் ஆ) சோழர் காலம் இ) சேரர் காலம் ஈ) பாண்டியர் காலம்

**ஆ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **8 ஒ 1 = 8**

7. 'இறவுப் புறத்தன்ன' எனத் தொடங்கும் நற்றிணை பாடலில் பயின்று வருவது..........
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறைஉவமம் ஈ) உவமைத்தொகை

8. 'ஓர் உல்லாசப்பயணம்' என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) ஜெயகாந்தன் ஆ) ராஜம் கிருஷ்ணன் இ) வண்ணதாசன் ஈ) கந்தர்வன்

9. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' என்னும் விதி பயின்று வரும் சொல்
அ) பம்பரம் ஆ) தீக்குச்சி இ) கண்ணீர் ஈ) கரையேற

10. 'அவரைப் பிஞ்சு' இச்சொல்லுக்கு மரபுச் சொல் எழுதுக.
அ) அவரைக்காய் ஆ) அவரைப்பொட்டு இ) ஆவாரம்பூ ஈ) அவரைப்பூ

11. 'பஞ்சநதீஸ்வரர்' – தமிழ்ப் பெயர் தருக.
அ) சிவன் ஆ) பரமேஸ்வரன் இ) ஐயாறப்பர் ஈ) ஆதிமூலவர்

12. 'என்று <u>தினந்தினம்</u> அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு :
அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) உரிச்சொற்றொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

13. பொருந்தாத இணையைத் தேர்க :
அ) ஒவ்வொரு கல்லாய் – த.நா. சேனாபதி
ஆ) ஓர் உல்லாச பயணம் – வண்ணதாசன்
இ) மண் – அய்க்கண்
ஈ) மகன் – பா. செயப்பிரகாசம்

14. மரபுத் தொடருக்குரிய பொருளைத் தேர்க :
இரட்டை நாக்குப் பேர்வழி. அ) வாய் நீளம் ஆ) ஏமாற்றுபவர் இ) மாற்றிப் பேசுபவர் ஈ) ஏமாறுபவர்

**II. குறுவினா (அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 2 = 6**

15. தமிழரசி குறவஞ்சியின் அரங்கேற்றம் பற்றிக் கூறுக.

16. உமறுப்புலவர் எழுதிய பிற நூல்கள் யாவை?
17. இராசராச சோழனின் முரசு குறித்து எழுதுக.
18. தாழை அரும்புக்குக் கூறப்பட்ட உவமையைச் சுட்டுக.

**(ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

19. கவிதையின் தலையாய நோக்கமாக வையாபுரிப் பிள்ளை எதனைக் குறிப்பிடுகிறார்?
20. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.
21. மக்கள் முதலில் எங்கு தடுமாற்றம் அடைந்தனர்? மு.வ. கூறும் விளக்கம் யாது?

**(இ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
அ) அறிவு குறைவு, கவன குறைவு, திறமை குறைவு ஆகியவற்றால் விபத்துக்கள் உண்டாகின்றன.
ஆ) உணவு பொருள் தரகுறைவாக விற்க்கப்படுவதால் நச்சுக் காளான் உண்டாகி செரிமானம் குறைகிறது.
23. தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
அ) இடது பக்கம் இருப்பது காந்தி சிலை அன்று  ஆ) இதனைச் செய்தது இவர் அல்லவா?
24. கொச்சைச் சொற்களை திருத்தி எழுதுக.
அ) விடியங் காட்டியும் வெத்தில போடுறது ஒரு பளக்கமா  ஆ) மழைக்குக் கொடை பிடிச்சான் *CTEN*
25. பிற மொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.  அ) சாம்பியன் ஆ) எக்கச்சக்கம் இ) ஸ்ரீமான் ஈ) பால்கனி
26. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) யானை கத்தியதால் மான் குட்டிகள் ஓடின.  ஆ) பலாப்பிஞ்சையும் மாம்பிஞ்சையும் என் அம்மா கொண்டுவந்தார்கள்.
27. அண்ணம் – அன்னம் – பொருள் வேறுபாடு அறிந்து தொடரில் அமைந்து எழுதுக.
28. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி எழுதுக.  அ) சேவடி ஆ) குருகுமுண்டு
29. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.  அ) அசைத்த ஆ) செய்க
30. சொற்களைச் சேர்த்தும் இடம் விட்டும் எழுதும் வழிமுறைகளில் இரண்டினை எழுதுக.

**III. சிறுவினா (அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31. ''நெடுந்தேர் ஊர் மதி வலவ
முடிந்தன்று அம்ம நான் முன்னிய வினையே''
– இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
32. சிக்கனத்தின் சிறப்புளாக கவிஞர் சுரதா குறிப்பிடுவன யாவை?
33. முல்லைத்திணை அல்லது பொருண்மொழிக் காஞ்சித் துறையை விளக்குக.

**(ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

34. பண்டைய தமிழர்கள் பொருளீட்டுவதிலும் ஒரு வரைமுறையை வைத்திருந்தனர் என்பதை விளக்குக.
35. நாடு என்னும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?
36. கற்களை அடுக்கி வைக்கப்பட்டுள்ள கோவில்கள் பற்றிக் கூறுக.

**(இ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

37. எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்று தந்து விளக்குக. **(அல்லது)**
உருவக அணி – சான்று தந்து விளக்குக.
38. தமிழாக்கம் தருக.
அ) ஆ) இ) ஈ)
39. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக் கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை எடுத்தெழுதுக.

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே !
காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருணை நதி என
மேவிய ஆறுபல ஓடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு !
– பாரதியார்

40. பின்வரும் தலைப்பினுள் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை எழுதுக.
பொன் மாலைப்பொழுது **(அல்லது)** நட்பு

**IV. பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 x 6 = 18**

41. அ) அப்துல் ரகுமான் குழந்தைத் தொழிலாளர் நிலையைக் கண்டிரங்கி உரைப்பனவற்றை தொகுத்தெழுதுக. **(அல்லது)**
'சிறியோரை இகழ்தல் இலமே' என்பதை தேம்பாவணி வாயிலாக நிறுவுக.
42. அ) கோ – கோவன் என்னும் சொற்களைப் பற்றிய பாவாணர் கருத்துக்களைத் தொகுத்து வழங்குக. **(அல்லது)**
நீதி கூறும்போது நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதைச் சான்றுடன் விளக்குக.
43. இ) 'பால்வண்ணம் பிள்ளை' இக்கதையின் ஒரு பகுதியை நாடக வடிவில் எழுதுக. **(அல்லது)**
'கிழிசல்' இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.

**V. அடிமாறாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4 + 2 = 6**

44. அ) 'மனித ரெலாம்' எனத் தொடங்கும் 'புத்தகசாலை' பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'நோய்' என முடியும் திருக்குறளை எழுதுக.